உ

சிவமயம்





மூளாயைப் பிறப்பிடமாகவும்,

சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. சதாசிவம் கார்த்திகேசு

அவர்களின் சிவப்பேறு குறித்த

# ஞாபக மலர்

16. 04. 2006



# சமர்ப்பணம்

அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்
அன்புச் சகோதரர்கள் அரும்பெரும் பொக்கிஷம்
மைத்துனர் மைத்துனியர் மகத்தானவர்
பேறாமக்கள் ~ மருமக்கள் பெறுதற் அரியவர்
என்று யாவரையும் அன்புடனும் பண்புடனும்
பாசத்துடனும் ஆசைபல காட்டி
மாயமாய் மறைந்த
எங்கள் இல்லத்தின் குலக்கொழுந்தின்
பாத கமலங்களிற்கு

இச் சிறு ஞாபக மலரினை சமர்ப்பித்து

அமைதி பெற இறைவனை

இறைஞ்சுகிறோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

உ

சிவமயம்



அன்னை மடியில்
1925/10/21

ஆண்டவன் அடியில்
2006/03/15

# அமரர்

# திரு. சதாசிவம் கார்த்திகேசு

திதி வெண்பா

அருமையாம் பார்த்திபவாண்டு ஆங்கது பங்குனித்திங்கள்
தருமொன்றாம் உத்தரமொடு திகழ் பிரதமைத்திதியில்
சாற்றுபுகழ் கார்த்திகேசு சங்கரனார் தாள்தனையே
ஏற்றுவர்ந்து கலந்திட்டார் சிறந்து.

உ



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு வாலவாயான் திருநீறே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்.

உ

# அமரர் திரு. சதாசிவம் கார்த்திகேசு

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழமணித் திருநாட்டின் மகுடமென விளங்கும் வடமாகாணத்தின் வலிகாமம் மேற்கில், அருள் பொங்கும் சித்தி விநாயகப் பெருமான் எழுந்தருள் பாலிக்க; சைவமும் தமிழும் தழைத்தோங்கித் தமிழர் கலையும், கலாச்சாரமும் ஒளிர்வீட்டுப் பிரகாசிக்க, வேளாண்மையும், வணிகச் செல்வச் சிறப்புடன், விருந்தோம்பும் பண்புடை அறிஞர் வாழும் ஊர் மூளாயாகும்.

இவ்வூரில் சீரும் சிறப்போடு புகழுடன் வாழ்ந்த சித்தன்கேணியைச் சேர்ந்த புவிராஜசிங்க முதலி அவர்களின் வழித்தோன்றலாகிய வைத்திலிங்கம் அவர்களுக்கும் பார்வதியார் அம்மையாருக்கும் சிரேஷ்ட புதல்வராக சதாசிவம் பிறந்தார். திரு சதாசிவம் அவர்கள் சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் புதல்வியாகிய சுந்தரம் அவர்களை மணம் புரிந்தார். இவர்களின் இல்லற வாழ்க்கையின் பயனாக திரு.கார்த்திகேசு 21–10–1925ஆம் ஆண்டு இவர்களுக்கு மைந்தனாகப் பிறந்தார். இவருடன் உடன் பிறந்தோர் காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, தங்கம்மா, மற்றும் நடராசா (சிங்கப்பூர்), முத்துப்பிள்ளை (சங்கரத்தை) ஆகியோராவர். அமரர் திரு. ஆ. கனகசபை அமரர் கணேசன், திருமதி. சரஸ்வதி நடராசா (சிங்கப்பூர்) அமரர்

தர்மலிங்கம் ஆகியோர் இவரின் மைத்துனர்கள், மைத்துனி ஆவார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியைச் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியிலும் கற்றார். இவரின் தந்தையார் காலமான பின், இவரின் தந்தையாரின் சகோதரியான திருமதி.நாகமுத்து கந்தையா அவர்களுடன் சித்தன்கேணியில் வாழ்ந்து தனது உயர்கல்வியை வட்டு இந்துக்கல்லூரியிலும், பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் தொடர்ந்தார். கல்வியில் முதல் மாணாக்கனாக விளங்கிய இவர் ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றார். 1945ஆம் ஆண்டு அரசாங்க சேவையில் எழுதுவினைஞராகப் பதவி ஏற்றுக் கொழும்பில் பணியாற்றினார்.

இவர் தனது 28ஆவது வயதில் சித்தன்கேணியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சுந்தரம்மா தம்பதிகளின் ஏகபுதல்வியான வள்ளிஅம்மாள் அவர்களை 1953ஆம் ஆண்டு வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். இவர்கள் சீரும் சிறப்புடனும் இல்லற வாழ்வு வாழும் போது நிர்மலாதேவி, இராஜகுமாரன், சந்திராதேவி, பராசக்தி, யசோதரா, சிவகுமாரன், சிவகௌரி ஆகியோரைத் தன் மக்களாகப் பெற்று மகிழ்ந்தனர். இவர்களை உரிய முறையில் சிறப்பாக வளர்த்துக் கல்வி கேள்விகளில் மேம்பட வைத்தார்.

இவர் தன் மூத்த புதல்வி நிர்மலாதேவியை சித்தன்கேணியச் சேர்ந்த சிவப்பிரகாசம் பங்கயவல்லி தம்பதிகளின் ஏகபுதல்வனாகிய நவரட்ணராஜா

அவர்களுக்கும் இிராஜகுமாரனை (France) சித்தன்கேணியைச் சேர்ந்த அருட்பிரகாசம் சத்தியபாமா தம்பதிகளின் ஏகபுதல்வியாகிய கலைச்செல்வி (France) அவர்களுக்கும் சந்திராதேவியை பண்ணாகத்தைச் சேர்ந்த வெ.சின்னையா பென்னம்மா தம்பதிகளின் புதல்வன் வைகுந்தவாசன் (கொழும்பு, சர்மிளா இன்) அவர்களுக்கும் பராசக்தியை (Canade) தொல்புரத்தைச் சேர்ந்த கனகரட்ணம் நீலாம்பிகை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரான தில்லையம்பலம் (கணக்காளர், கனடா) அவர்களுக்கும் யசேதராவை சித்தன்கேணியைச் சேர்ந்த நவரட்ணம் சரஸ்வதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் பரமநாதன் (உரிமையாளர் நிரைஞ்சனாஸ், நாதன்ஸ்) அவர்களுக்கும் சிவகுமாரனை (Electronic design Engineer - London) நெல்லியடியைச் சேர்ந்த கணேசரட்ணம் இராசலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி ஜெயசுதா (கணக்காளர் – லண்டன்) அவர்களுக்கும் சிவகௌரியை (Dip-in-music - France) வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அருணாசலம் இரட்ணாம்பிகை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனாகிய கணானந்தன் (France) அவர்களுக்கும் மணம் முடித்து வைத்து அவர்களைச் சிறப்பாக வாழ வைத்தார்.

இவர் தக்ஷாயினி – றமணன், தனுஷாயினி, மயூரா (France) கோபிகா, சாயினி, ஜோ (Canada), ஆகாஷ் (London), ரட்ணமகிபன் (France), சிந்துாரன் (France) ஆகிய அன்புப் பேரக்குழந்தைகள் புடைசூழ சத்யசனாதன் என்னும் அருமைப் பூட்டனையும் கண்டு பூரிப்படைந்து மகிழ்ந்தார்.

இவரது இறுதி நாட்களில் இளைய மகன் சிவா தன் மகன் ஆகாஷ்ஜ அப்பப்பாவைக் காட்டக் கூட்டி வந்த வேளை அவர் மகிழ்ந்து தன் அருமைப் பேரக்குழந்தையைத் தனது உறவினர்களுக்குக்காட்டி இவன் தான் என் வாரிசு என்று கூறி மகிழ்ச்சியடைந்தார்.

இவர் தன் சேவைக்காலத்தில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் – கொழும்பு, சந்தைப்படுத்தும் திணைக்களம், Civil Aviation Departmet-K.K.S. Jaffan, கச்சேரி – யாழ்ப்பாணம், உதவி அரசாங்க அதிபர் பணிமனை – துணுக்காய் ஆகிய திணைக்களங்களில் பணியாற்றி இறுதியாக சங்கானை பிரதேச செயலகத்தில் பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றார். இவர் பணிபுரியும் போது தொழிலில் மிக்க வீருப்பமும், கட்டுப்பாடும், நேர்மையும் கொண்டவராக இருந்தமையால் தன் பணிகளைத் திறம்படச்செய்ய முடிந்தது. இதனால் உயர் அதிகாரிகளும் பொதுமக்களும் இவரை மிகவும் மதித்தனர். பதவி உயர்வுகளும் இவரை நாடி வந்தன. அரசாங்க பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் சித்தன்கேணி கிராம அபிவிருத்திச் சங்கத்தில் தலைவர், செயலாளர் பதவிகளை ஏற்று சமூக சேவைகளை ஆற்றினார். இறுதியாக ஓய்வூதி ஒன்றியத்திலும் தலைவர், செயலாளர் பதவிகளை வகித்துத் தம்மால் ஆற்றக்கூடிய சேவைகளையும் செய்வாராயினர்.

தனது வாழ்க்கையின் எல்லாக் கடமைகளையும் பூரணமாக நிறைவேற்றி, தனது உற்றார், உறவினருக்கும் தன்னை நாடிவருவோர்களுக்கும் துணையாகவும் அவர்களது கஷ்ட நஷ்டங்களில் சிறந்த ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்கி அவர்களுக்கு நல்வழி காட்டுவதிலும் இவர் வல்லவராவர்.

ஆழ்ந்த அறிவும், பண்பான உள்ளமும் எளிமையான வாழ்வும் உண்மை, நேர்மையாகவும் நடந்து எல்லோருக்கும் முன் உதாரண புருஷராய் இவர் விளங்கினார். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது அவர் விரும்பிக்கூறும் உண்மையாகும். இவர் தனக்குள்ளே தெய்வீக வழிபாட்டில் ஈடுபடுவார். உறக்கத்திற்குச் செல்லுமுன் தினமும் சாயிராம், சாயிராம் என்று தெய்வீக நாமத்துடன் உறங்குவார். தன் இறுதி மூச்சு நிற்பதற்கு சிறிது முன்பும் அற்புதமாக தெய்வீகப் பிரார்த்தனையில் தன்னை ஈடுபடுத்தி, நன்றி கூறினார். அமைதியாக பூரண வாழ்வு வாழ்ந்த இவர் தன் எண்பத்தொராவது (81) அகவையில் பார்த்திப ஆண்டு பங்குனி மாதம் 01ஆம் திகதி (15 – 03 – 2006) புதன்கிழமை உத்தர நட்சத்திரமும், பிரதமைத் திதியும் இருந்தவேளை இரவு 9.00 மணியளவில் அமைதியாக மண்ணுலக வாழ்வை நீத்து சிவகதியெய்தினார்.

**ஓம் சாந்தி। சாந்தி। சாந்தி।**



# எல்லாஞ் சிவன் செயல்

சூரியன் வருவது யாராலே
தூமதி தவழ்வது யாராலே
விண் மீன் மிளிர்வது யாராலே
வெய்யிலெறிப்பது யாராலே
கண்ணினைக் காண்பது யாராலே
காற்று மடிப்பது யாராலே
தண்ணீர் பெருகுதல் யாராலே
தக்கோர் புகழ்வது யாராலே
பூமி சுழல்வது யாராலே
பூக்கள் மலர்வது யாராலே
கால்கள் நடப்பது யாராலே
கைகள்எடுப்பது யாராலே
எண்ணிப்பார் நீ யறிவாயே
எல்லாஞ் சிவன் செயல் குறியாயே
சொல்லு சுதந்திரம் பெறுவாயே
சுவாமி வாக்கிது தெரிவாயே.

– யோகர் சுவாமிகள் –



உ

# ஆதி சங்கராச்சாரியார்

அருளிய

# பஜ கோவிந்தம்

## தமிழ்மொழியாக்கம்

**சாயி ஞானசேகரம் ஐயா**

1. கோவிந்தனைத்தேடுகோவிந்தனைத் தேடு
கோவிந்தனைத்தேடு மூடமதியே
அந்திய காலம் வந்த அவ்வேளை
இலக்கண விதிகள் துணைக்கு வராவே - பஜ

2. பால வயசு விளையாட்டில் மாய்ச்சல்
காளை வயசு யுவதியர் மாய்ச்சல்
விருத்த வயசு கவலையில் மாய்ச்சல்
பரப்பிரம்மத்தில் எவர்க்குண்டு மாய்ச்சல் - பஜ

3. சஜ்ஜன சங்கத்தில் பற்றுக்கள் நீங்கும்
பற்றுக்கள் நீங்க மோஹம் அகலும்
மோஹம் அகல சாந்தி நிலவும்
சாந்தி நிலவ விடுதலை உறுதியே - பஜ

4. நான், "நீ" "அவன்" யார்க்கும் விஷ்ணுஒருவனே
அமைதியின்மையால் சினக்கிறாய் என்னுடன்
சமநோக்குடன் எந்நிலையிலும் வேண்டின்
விஷ்ணுத்வம் நீ விரைவில் அடைவாய் - பஜ

5. ப்ராணாயாமம் ப்ரத்யாகாரம்
நித்யம் அநித்யம் என்பதின் விசாரம்
ஜபசமேத சமாதி அனுஷ்டானம்
செய் அவதானமாய் பேர் அவதானமாய் - பஜ

6. யார் உன் மனைவி? யார் உன் புத்திரன்?
இந்தச் சம்சாரம் அதிக விசித்ரம்
எவருடையவன் நீ? எங்கிருந்து வந்தாய்?
இவற்றின் உண்மையை சிந்தி சோதரா - பஜ

7. இரவும் பகலும் காலையும் மாலையும்
மாரியும் கோடையும் உருண்டு கொண்டோடும்
காலம் உன் ஆயுளை விளையாடிக் கழிக்கும்
இருந்தும் விட்டதோ உன் ஆசைப்புயல்கள் - பஜ

8. யோகானந்தமோ, போகானந்தமோ - (ஒன்று)
சேர்ந்த ஆனந்தமோ தனிமையின் இன்பமோ
ப்ரம்மானந்தம் எவருடைய சித்தத்தோ
அவர்க்கே ஆனந்தம், மெய் ஆனந்தம் அவர்க்கே - பஜ

9. பகவத் கீதை கொஞ்சம் பயின்றவன்
கங்கா ஜலம் ஒரு துளிதான் உண்டவன்
முராரியை ஒருதரமாகிலும் நினைந்தவன்
அவனுடன் யமனுக்குச் சர்ச்சை இல்லையே - பஜ

10. தாமரை இதழில் நீர்த்துளி நிலையா(து)
இந்த வாழ்வும் என்றும் நிலைக்கா(து)
நோய் அகங்காரம் மூடியதிவ்வுடல்
அறிநீ,லோகம் சோகமயமே - பஜ

11. "சத்துரு, மித்திரன், புத்திரன், இனசனம்
நண்பன், பகைவன்-இப் புத்தியை மாற்று
பேதம் காண்பதை எதிலும் விட்டிடு
என்றும் உன் ஆத்மாவை எதிலும் காண்பாய் - பஜ

12. செல்வம் ஓர்கேடு சிந்தித்தறி நீ
கொஞ்சச் சுகமும் இல்லை இது நிசம்
புத்திரராலும் செல்வாக்குப் பிதியே
எங்கு நோக்கிலும் இதையே காண்பாய் - பஜ

13. மறுபடி ஜனனம், மறுபடி மரணம்
மறுபடி ஜனிக்கத்தாய் வயிற்றில் சயனம்
இந்தச் சம்சாரம் தொலைவது கஷ்டம்
கருணைக்கடலே காத்தருள் வீரே - பஜ

14. காமம், க்ரோதம், லோபம், மோஹம்,
இவைகளை அகற்று சிவோஹத்தில் நிலைப்பாடு
ஆத்ம ஞானம் அறியாமூடா
நரகத்தில் தள்ளுவார், கட்டி வதைப்பார் - பஜ

15. பாடுவது கீதை, ஸஹஸ்ரநாமம்
நினைப்பது என்றும் ஸ்ரீபதி ரூபம்
நிலைப்பது சத்சங்கத்தில் சித்தம்
கொடுப்பது தீன ஜனர்க்குச் செல்வம் - பஜ

16. குருசரணமலர் சேர் பெரும் பக்தா
ஸ்மஸாரத்தில் நின்ற வீடு பெறும் முக்தா
இந்திரியம் மனசை இங்ஙனம் அடக்கி (உன்)
இதயத்தில் உறையும் மெய்ப்பொருளை அடைவாய் - பஜ



உ

# மதங்களின் ஒற்றுமை

ஓடும் நதிகள் பலவானாலும், நாடும் சமுத்திரம் ஒன்றாவது போல், பசுக்களின் நிறங்கள் பலவானாலும் பாலின் நிறம் ஒன்றாவது போல். ஆபரணங்கள் பலவானாலும், அவைகளை ஆக்கும் தங்கம் ஒன்றாவது போல், விளக்குகள் பலவானாலும் ஜோதி ஒன்றாவது போல் மதங்கள் பலவானாலும், அவை கொண்டு சேர்க்கும் மூலம் ஒன்றுதான். அவைகளின் குறிக்கோள் பரம்பொருளை உணர்தலே.

ஒன்றே குலம் அதுவே மனிதகுலம்
ஒன்றே சமயம் அதுவே அன்புஎனும் சமயம்
ஒன்றே பாஷை அதுவே இருதய பாஷை
உன்றே கடவுள் அவர் எங்கும் நிறைந்தவர்.

இக்கலியுகத்தில் தீயசக்திகள் தாண்டவமாடி நல்லோர் அனைவரையும் அழித்து கடவுளின் பக்தர்களையுமே அடிபணிய வைக்கையில் எல்லோரையும் காப்பாற்ற வல்லது கடவுளின் நாமம் ஒன்றே.

நாமஸ்மரனை செய்யுங்கள் நாமம் மலை போல் பாவத்தையும் இடிபோல் துகளாக்கும். இன்பத்தைப் பெறும் வழி விரும்பியதைச் செய்வதிலன்று, செய்ய வேண்டியதை விரும்புவதில்லையே.

உங்களுடைய எண்ணங்களாலும், ஆசைகளாலும், கர்மங்களாலும் நீங்களே உங்களுடைய எதிர்காலத்தை அமைத்துக் கொள்கிறீர்கள். தெய்வீகமான எண்ணங்களால் ஒவ்வொரு சணத்தையும் புனிதப்படுத்துங்கள்.

தெய்வப் பிரிதி, பாபப் பீதி, சமூக நீதி என்றும் அழியாச் சத்திய வஸ்துவான பாம்பொருளிடம் அன்பு கொள்ள வேண்டும். அதுவே தெய்வப் பிரீதி. தெய்வப்பிரீதி இருந்தால் மனிதன் பாபம்புரிய அஞ்சுவான். அதுவே பாபப்பீதி ஒரு சமுதாயத்தில்வாழும் மக்கள் தெய்வத்திடம் அன்பும் பாபம் புரிய அச்சமும் கொண்டுள்ளவர்களாக இருந்தால் அவர்கள் நடத்தை தர்ம வழியில்தானே இருக்கும். அந்த சமுதாயத்தில் நீதி நிலவவே செய்யும். அதுவே சங்கநீதி அல்லவா? தெய்வப் பீரிதியும் பாபப் பீதியுமே சங்க நீதிக்கு வழி உலக அமைதிக்கு இது ஒன்றே அடிப்படையாகும்.

உ

# இறைவனின் நாமம்

இறுதி நேரத்தில் காப்பாற்றுவது இறைவனின் நாமமே! இன்றையிலிருந்து இறைவனின் நாமத்தை உச்சரித்தால் அல்லவா, இறுதி நேரத்தில் அந்த நாமம் நினைவிற்கு வரும்?

பகவத்கீதையிலும் கூட ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, "இறுதி நேரத்தில் என்னை சிந்தித்தபடி யார் உயிரை விடுகின்றார்களோ, அவர்கள் என்னையே வந்தடைகின்றனர்" என்று கூறியுள்ளார். ஜடபரதர் மான்குட்டியின் மீது அன்பைவைத்துக்கொண்டு, அதை எண்ணியபடியே உயிரை விட்டாராம். அதன் பயனாக அவர் மானாகவே பிறந்தார் எனச் சொல்லப்படுகிறது.

மரண காலத்தில் யாருக்கானாலும் அளவற்ற அன்பிற்குப் பாத்திரமானதே நினைவிற்குவரும். எனவே, வாழ்நாள் முழுவதும் ஓய்வு வேளையிலாவது, இறைவனின் நாமத்தை உச்சரிப்பார்களானால், இறுதி நேரத்தில் அந்தப் பழக்கத்தினாலவது அந்த நாமம் நினைவிற்கு வரும். எனவே இன்றையிலிருந்தே நாமஸ்மரணை செய்ய ஆரம்பியுங்கள்.

சேஷய்யா என்ற புலவர் நரசிங்க சதகத்தில், "பிரபு! கபவாத பித்தங்கள் என்னை வாட்டும்பொழுது, பயத்தால் நடுக்கம் பிறந்து கஷ்டப்படும் சமயத்தில் என் நாவினால் உம்மை 'நாராயணா! என அழைப்பேனோ அல்லது அழைக்கமாட்டேனோ!" என உரைத்து, 'நரசிங்கா! நரசிங்கா!' என நாமத்தை உச்சரித்தா். சிந்தனையாளர்கள் அனைவரும் அவர் சொன்னதை அப்படியே "ஆம்" என ஒப்புக்கொள்ளுவார்கள். இறுதி நேரத்தில் ஏற்படும் நிலையை யார் அறிவார்கள்?

உற்றார் உறவினர் அழுகை; டாக்டர்களின் ஊசி மருந்துகள்! என்ன கோலாகலம்! அந்த நபர் இறந்து விடுவார் என குழப்பமடைந்து கொண்டிருக்கிறார்களே! "நான் நாமஸ்மரணை செய்து கொண்டிருக்கிறேன். நீங்கள் நிசப்தமாக இருங்கள்" என அந்நோயாளி உரைத்தால், "ஐயோ! என் வேலையை என்ன செய்துவிட்டுப் போகப் போகிறீர்கள்?" என்று ஒருவரும், "எனக்கு என்ன கொடுத்தாய்? ஏன் கொடுக்கவில்லை?" என மற்றொருவரும் கேட்க, மேலும் அங்கே குழுமியிருந்தோரின் சொந்தக் கவலை, பயம் வேதனைகள் சொல்லத்தரமன்று. இவ்வளவு தடைகளையும் கடந்து, அந்த பக்தி வளர்வதுதான் எப்படி?

பழக்கமும் பக்தியும் சேர்ந்தால், இறுதி நிமிடத்திலும் கூட, இறைவனின் மீதே மனம் நிலைத்து நிற்கும். எனவே, "இன்றையயிலிருந்து நாமஸ்மரணை செய்யுங்கள்" காசியில் கங்கா ஸ்நானம் செய்தும்கூட "டுக்ருஜ்கரனே" என்கின்ற வியாக்கரண சூத்திரத்தையே வழக்கமாக உரைத்துவந்த பண்டிதர் ஒருவரிடம் ஸ்ரீ சங்கராச்சாரியார், "பஜகோவிந்தம் பஜகோவிந்தம் கோவிந்தம்பஜ மூடமதே, சம்ப்ராப்தே ஸன்னிஹிதேகாலே நஹி நஹி ரக்ஷதிடுக்ருஜ்கரனே" அதாவது, இன்றையிலிருந்து நாமஸ்மரணை செய்தால் அல்லவா, அந்த நாமம் இறுதி நிமிடத்தில் நினைவிற்கு வந்து, உன் அந்த திருஷ்டி முழுவதும் நிறைந்து உன்னைத் தூய்மையாக்கும்" எனப் போதித்தார்.

அன்றைய கடினமான ஸம்ஸ்கிருத வாக்கியங்களை, இன்று, மிகத்தெளிவாக அனைவருக்கும் விளங்கும்படியான எளிய வாக்கியங்களால், பகவான் ஸ்ரீ பாபா அவர்கள் உரைத்து வருகின்றார்கள். கிடைத்துள்ள வாய்ப்பை நாம் பயன்படுத்துக்கொள்ள வேண்டும். பகவான் ஸ்ரீ பாவாஅவர்கள், "அந்த நாமம் மேலானது, இந்த நாமம் தாழ்ந்தது" என உரைத்து, எந்த ஒரு நாமத்தையும் நமக்கு ஒப்படைக்கவில்லை. "ராமா, கிருஷ்ணா, சிவா, சப்பிரமணியா, தத்தா" என்பன போன்ற நாமங்கள் முழுவதையும் கலந்து ஸ்மரணை செய்யும்படி ஸ்ரீ பாபா அவர்கள் நமக்குப் போதிக்கவில்லை. "பஜனை, சங்கீர்த்தனம் போன்றவைகக்கு நாமங்களனைத்தையும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஆனால், ஏகாந்தமாக அமர்ந்து ஜபம், தியானம் செய்யம்பொழுது, உங்களுக்கு மிகவும் விருப்பமான நாமத்தையே உச்சரிக்க வேண்டும்;" என ஸ்ரீ பாபா அவர்கள் கூறுகின்றார்க். மேலும், "தியானத்திற்கு உபதேச நாமத்தைமட்டும் தியானிக்க வேண்டும். உபதேச நாமம என்றால் நீங்கள் குருவிடம் கேட்டு பெற்றுக்கொண்ட நாமம். நீங்கள் உபதேசம் பெற்றிராவிடில், உங்களுக்கு மிக விருப்பமான நாமம் எதுவோ, அதையே ஸ்மரணை செய்யுங்கள். அந்தச் சிறிய நாமத்தின் எழுத்துக்களிலேயே பிரம்மாண்டம் முழுவதையும் தரிசிக்க முயற்சி செய்யுங்கள். இன்றையிலிருந்து நாமஸ்மரணை செய்யுங்கள்".



# திருவடி துணை

கண்ணபிரானும் காணாக் கழலிணை
என்றும் எந்துணை ஓம்
விண்ணும் மண்ணும் ஒன்றாய் நின்ற மெய்யடி
எந்துணை ஓம்
எண்ணு மெண்ணமெல்லா மறியு மிணையடி
எந்துணை ஓம்
நண்ணும் மடியார் நாவில் நிற்கும் நல்லடி
எந்துணை ஓம் 1
பண்டுமின்றும் என்றுமுள்ள பரனடி
எந்துணை ஓம்
மன்றுளாடும் மலரடி யிணைகள் என்றும்
எந்துணை ஓம்
நன்றுந்தீதுந் தானா காத நல்லடி
எந்துணை ஓம்
மன்றுளாடும் மலரடி யிணைகள் என்றும்
எந்துணை ஓம் 2

அந்த மாதி யில்லா வடியினை என்றும்
எந்துணை ஓம்
வந்த கால லுயிரை வாங்கிய மலரடி
எந்துணை ஓம்
பந்த பாசம் நீங்கி யாண்ட பரனடி
எந்துணை ஓம்
தந்தை தாயாய் நின்ற தாளிணை என்றும்
எந்துணை ஓம் 3

நினைக்கு மடியரை உருக்கு மடியினை
என்றும் எந்துணை ஓம்
சினத்த காலனைச் செறுக்கு மடியினை
என்றும் எந்துணை ஓம்
தனத்த தனதன தாண்டவத் தாளிணை
என்றும் எந்துணை ஓம்
அனைத்துந் தானா யாடிய அடியிணை
என்றும் எந்துணை ஓம் 4

– யோகர் சுவாமிகள் –

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தலைவர் இணையிலா அன்பின் இருப்பிடமான அமரத்துவம் பெற்ற திரு. சதாசிவம். கார்த்திகேசு அவர்களின் இறுதிச்சடங்கில் பங்குபற்றியோர்களுக்கும், அனுதாபச் செய்திகள், கடிதங்கள், தந்திகள், தொலைபன்னிகள் மூலம் அனுதாபம் தெரிவித்தோர்க்கும், சகல வழிகளில் ஆதரவு நல்கிய அன்புள்ளவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்ட, சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர்கள், சித்தன்கேணி கிராம மக்களுக்கும், இன்றைய வீட்டுக்கிருத்திய வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தோர்க்கும் இம்மலரை அழகுற மலர ஆலோசனை நல்கிய திரு. ஆ. புஸ்பநாதன், திரு. வி. தர்மராசா அவர்களுக்கும், மற்றும் பெரியோர்களுக்கும் இம்மலரை அழகுற அச்சிட்டு உதவிய சங்கானை திருமொழி அச்சகத்தினர்க்கும், எங்கள் இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.**

**சந்திரா வாசா**
**மாதர் சங்க வீதி,**
**சித்தன்கேணி.**



# புவியராஜசிங்க முதலியார் வழித்தே

- புன்னர்
  - குருநாதர்
    - கணபதியார் + பார்வதி
      - குட்டியர்
      - சின்னவர்
      - ஆறுமுகத்தார்
      - கதிரவேலு

- நாகமுத்து + கந்தையா
- சதாசிவம் + சுந்தரம்
  - இலட்சுமிப்பிள்ளை + நடராசா
  - கார்த்திகேசு + வள்ளியம்மாள்
    - நிர்மலாதேவி + நவரட்ணராஜா
      - தக்ஷாயினி + றமணன்
        - சத்யசனாதன்
      - தனுஷாயினி
    - இராஜகுமாரன் + கலைச்செல்வி
      - மயூரா
    - சந்திராதேவி + வைகுந்தவாசன்
      - கோபிகா சாயினி
    - பர + தில்லை
  - நடராசா + சரஸ்வதி
  - தந் + க
- சரவணமுத்து + நாகமுத்து
- ஆறுமுகம் + கனகாம்பிகை

## ...லிங்க முதலியார் வழித்தோன்றல்

புன்னர்

↓

குருநாதர்

↓

கணபதியார்
+
பார்வதி

↓

கதிரவேலு | ஆச்சி | வயித்திலிங்கம் + பார்வதியார்

↓

ஆறுமுகம் + கனகாம்பிகை | முத்துப்பிள்ளை + விஸ்வலிங்கம் | கணபதிமுத்து + ஜெயம்

↓

நடராசா + சரஸ்வதி | தங்கம்மா + கணேசன் | முத்துப்பிள்ளை + தர்மலிங்கம்

↓

சந்திராதேவி + வைகுந்தவாசன் → கோபிகா சாயினி

பராசக்தி + தில்லையம்பலம் → ஜோ

யசோதரா + பரமநாதன்

சிவகுமாரன் + ஜெயசுதா → ஆகாஷ்

சிவகௌரி + கணானந்தன் → ரட்ணமகிபன் சிந்தூரன்

இவ்வுலகில் உண்மையான சாந்தியை தெய்வீக விழிப்புணர்வினால்
மாத்திரமே எம்மால் கொண்டுவர முடியும். உலகில் சாந்தியையும்,
சமாதானத்தையும் கொண்டுவர உலகத்தலைவர்கள் குறிப்பிடும்அளவு
முயற்சி மேற்கொண்டுள்ளார்கள் என்பதில்
சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் வெற்றியடைந்ததற்கான
அறிகுறிகள் எதனையும் சாயி காணவில்லை.
எமக்கு கிடைத்துள்ள ஒரேவழி எம்மனத்தை எம்முள் திருப்பி உலகில்
உண்மையான சாந்தியையும், சந்தோஷத்தையும் நாம் அடையத் தகுந்த
அனாதி ஆதாரமான பரம்பொருளை நாடிக் கண்டுபிடித்தலே
எம்மொவ்வொருவரது இருதயங்களுள்ளும் உண்மையில்
குடியிருப்பவரான கடவுளே அவ்வவதாரமாகும்.

தெய்வஸ்வரூபங்களே

நாமொவ்வொருவரும் சத் சித் ஆனந்தமே. இதுவே உங்கள் உண்மை
நிலை. இவ்வுண்மையை நீங்கள் மறந்து விட்டீர்கள். இப்பொழுது
அதனை நினைவு கூர்ந்து சாயி அநுபவித்து மகிழும் என்றும்
குறைவடையா பேரானந்தத்தை அநுபவித்து மகிழ உங்கள் மனம்
மறைந்து சத்தியமாக நீங்கள் வெளிப்படும்வரை உண்மைப் பொருளின்
ஆற்றல்மிக்க புனிதமான நாமத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.

- பாபா



திருமொழி அச்சகம், சங்கானை